**யட்டவத்த பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 03 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டவத்த பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) 09 வருமானச் செலவின கணக்கு விடயங்களில் ரூபா 10,063,304 கூட்டுமொத்தமாகக் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மணிக்கூட்டுக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக மாகாண எழுச்சி செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட ரூபா 1,279,176 செலவினம் மூலதனமாக்கப்படாமையினால் சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன

ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபை மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,085,814 தொகையான செலவினம் மற்றும் வல்பொல மயான நிலம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஏற்பட்ட ரூபா 1,071,145 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 216,999 பெறுமதியான 196 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற முற்பணக் கணக்குகளின் மீதிகளுக்கு பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,000,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,019,996 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 196,173 தொகையான மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,133,612 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 57,960 தொகையான மீதியும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 619,345 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல்

வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட முறையான நியமனக் கடிதம் இன்றி சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தது. ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 220,000 தொகையான படி சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,111,150 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,494,207 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,383,057 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளில் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதி விளைவின் மிகையை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் அந்த சதவீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஒன்றைக் காண்பித்திருந்தது.

(ஆ) மொத்த செலவினத்தை மொத்த வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் இந்த சதவீத்தில் தொடர்ச்சியான உயர்வைக் காட்டியதுடன் அது நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் திருப்பதிகரமான நிலையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 ஏக்கர் வரி

ரூபா 140,790 தொகையான ஏக்கர் வரி மீதியில் பிழையான பட்டியலிடலின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 88,298 மீதி ஒன்று உள்ளடங்கி இருந்தது.

### 2.3.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2004 ஆம் ஆண்டிற்கு முன் இருந்து மாற்றமின்றி முன்கொண்டு வருகின்ற நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 35,060 ஆகும்.

### 2.3.3 ஏனைய வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 110,055 கூட்டுத்தொகையான நீர்க் கட்டண மீதி மற்றும் ரூபா 25,300 கூட்டுத்தொகையான கழிவுப் பொருள் கட்டண மீதியும் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 843,785 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 1,356,070 தொகையும் அறவிடவேண்டியிருந்தன.

## 2.4 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 32,259 தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

---

மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டுக் கொள்கை கூற்றின் பிரகாரம் சுடலைக் கூடம் ஒன்றை நிர்மாணித்தல், நீர் உத்தேசத் திட்டத்தை விருத்தி செய்தல், விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு நிர்மாணம் மற்றும் முன்பள்ளி பாடசாலைக் கட்டிட நிர்மாணம் என்பன பிரதான நோக்கமாக இருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 17(i), (ii) மற்றும் (iii) என்ற பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காமல் சபைக்குரிய வாலவெல கம்சபா கட்டிடம் அமைந்துள்ள காணியில் திவி நெகும திணைக்களத்தின் மூலம் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி மற்றும் சமூக அடிப்படையிலான வங்கி சங்கங்கள் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், பிரதேச சபையினால் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுடிலும் கிடைக்கப் பெற்ற 262 கட்டிட விண்ணப்பங்களில் 179 விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் அதில் 08 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வழங்கப்பட்டிருந்த 07 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகியிருந்த போதிலும், அது தொடர்பாக பின்தொடர்

நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டிய 44 வியாபார நிறுவனங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டின் பின்னர் சபையின் காணி, கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

ரூபா 413,000 கிரயமான 02 ரெக்ரர் டேலர் மற்றும் ரூபா 3,450,574 பெறுமதியான டிபர் வண்டியொன்றும் ஒரு வருட காலமாக எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாதிருந்ததுடன் ஓடும் நிலையில் காணப்படுகின்ற ரூபா 1,200,000 பெறுமதியான இசுசு லொறி வண்டி 02 வருடங்கள் அளவிலான காலமாக குறிப்பிடப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(i)(i) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாது இரண்டு ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி ரூபா 340,434 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் 159(i) ஆம் பிரிவின் பிரகாரம் செயலாளரினால் அதிகாரம் கையளிக்கப்படாதிருந்த போதிலும், வருமானப் பரிசோதகரினால் மீளாய்வாண்டின் போது ரூபா 458,756 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் செயலாளரின் பெயரில் வீட்டுத் தொலைபேசியொன்று காணப்படாதிருந்த போதிலும், தொலைபேசிப் படியாக ரூபா 10,620 தொகையும், விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாத கையடக்கத் தொலைபேசிக்காக 2013 மே 27 ஆந் திகதிய 04/2013 ஆம் இலக்க

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 28,500 படியொன்றும் செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

---

கடந்த 07 வருடங்களுக்காக பிரதேச சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களுக்காக வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாமையினால் சபை நிதியத்திலிருந்து ரூபா 36,500 தொகை தண்டப் பணமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

**3.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

2012 ஆம் ஆண்டு வரையில் ரூபா 659,062 செலவில் மாகாண குறித்தொதுக்க மானியம் மற்றும் சபை நிதியம் என்பவற்றின் அடிப்படையில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. சபை அதிகாரப் பிரதேசத்தில் சிறிய பகுதியில் மாத்திரம் கழிவுகள் சேகரிக்கப்பட்டமையாலும், உக்காத பொருள் மேவுகையொன்று இன்றி எரிக்கும் முறைமையொன்று கடைப்பிடிக்கப்பட்டமையால், சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற நிலையொன்று எழுந்திருந்ததுடன், பிரதேச சபை சரியான கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளைப் பின்பற்றியிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

---

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 06 வருமான விடயங்களின் ரூபா 2,568,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 14 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 15 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 29 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,835,000 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 25 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 01 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) மனிதவள முகாமைத்துவம்